(ஆ) இல்லை. இத்திட்டத்தினால் ஏற்படும் பயன் வராக நதியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையளவை பொருத்திருக்கிறது. நன்றாக மழை பெய்யும்பொழுது நன்மை கிடைத்திருக்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

சின்னவாடம்பட்டியில் ஏரி அமைக்கும் திட்டம்.

315—(*வினா 18358)—திரு. கு. ரமணி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், கோவை தாலுகா, சர்க்கார் சாமக்குளம் யூனியனுக்குட்பட்ட சின்னவாடம்பட்டியில் கட்டப்படுகிற பெரிய ஏரியின் வேலை எப்பொழுது முடிவடையும்?

(ஆ) இதனால் பாசன வசதி கிடைக்கும் நிலங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இத்திட்டம் குறித்த அறிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது. திட்டம் நன்மை தருமென்று கருதப்பட்டு அரசு அனுமதித்தால் திட்ட வேலைகள் துவங்கப்படும்.

(ஆ) 560 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் 1967-க்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்திலிருந்து கேட்கப்பட்டு வந்த திட்டம். ஆனால் இதுநாள் வரைக்கும் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை எந்த அரசாங்கத்தாலும எடுக்கப்படாததால், இந்த திட்டம் நின்றுபோய் இருக்கிறது. தற்போது இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முன்னால் இருந்த அமைச்சர் அவர்களை அந்த இடத்திற்கு நாங்கள் அழைத்துச் சென்று, அந்த இடத்தை எல்லாம் பார்வையிட்ட பிறகு, இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் இதே சபையில் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையிலும் அந்தத் திட்டம் துவக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம? அதைக் கைவிடும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 14]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும், பயன் செலவு விகிதத்தைக் கணக்கிட்டு பார்த்தால் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமாக அமையவில்லை. இருந்தாலும் அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதி, இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாமா என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கு ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு ஒப்புதல் தெரிவிக்கிற நேரத்தில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக தற்போது ஒதுக்கீடு செய்த தொகை போதாது என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக கூடுதலாக தொகை ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம்முடைய தலைமைப் பொறியாளர் அவர்கள் திருத்திய மதிப்பீடு ஒன்றை அரசின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். தற்போது இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரை அனுப்பியதற்கு பிறகும், இன்னும் தாமதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை தெரிந்துக் கொள்ள முடியவில்லை. தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்று பல தடவை சொல்லப்பட்டது. 50 கிராமங்களுக்கு குடி தண்ணீர் கிடைக்கும். 560 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். புஞ்சை, நஞ்சையாக வரக்கூடிய நிலம். அங்கு இருக்கக் கூடிய பூமியைக் கூட விவசாயிகள் இலவசமாகவே தருவதாகச் சொல்லியும்கூட, நடைமுறைக்கு வரவில்லை என்றால், அந்த திட்டத்தை தடுப்பதற்காக, வேறு ஏதாவது "எக்ஸ்டெர்னல் போர்ஸ்சஸ்" என்று (external forces) என்று சொல்லப்படுகிற அப்பாற்பட்ட சக்திகள் ஏதாவது வேலை செய்கிறதா? திட்டவட்டமாக இது நடக்கும், இன்ன சமயத்தில் ஆரம்பிக்கப்படும் என்று ஏதாவது நிர்ணயம் செய்து, நமது புதிய அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியை பெறுவது என்பது எல்லாத் திட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிற, ஒரு நடைமுறை வழக்கம். அது ஒரு பார்ட் ஆப் தி ஃபைல் என்பது மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையில்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். நான் முன்பே சொன்னது போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கிய நேரத்தில், நிலம் கையகப்படுத்துவதற்காக ஒதுக்கிய தொகை போதாது என்றும், குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும், குறிப்பிட்டு இன்ன தொகையை அதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில்தான் திருத்திய மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான மாற்றங்களைக் கொடுக்கவோ, அல்லது வேறு யாரையாவது பாதுகாக்க வேண்டும் என்றோ, இதில் எதுவும் செய்யப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தின்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய ஏற்பாடுகள் முடிந்த பின்பு ஏற்கும் வகையில், இந்தத் திட்டம் இருக்குமானால், உடன்டியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வரும்.

திரு. மா. சின்னராசு : இந்தத் திட்டம் அந்தப் பகுதிக்கு நீர்ப்பாசனம் கொடுப்பது மட்டும் அல்லாமல், கோவை மாநகரத்திற்கு ஏற்படுகிற வெள்ளத்தை தடுக்கிற திட்டமாகவும் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் காலத்திலேயே கோவை மாநகராட்சி இந்த திட்டத்திற்காக நிதி உதவி அளிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதையும் கருத்தில் கொண்டு, பி.சி. ரேஷியோ, பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் வலியுறுத்தினால், வெள்ளத்தடுப்பு பணி நிவாரணத் திட்டம் என்ற வகையில் இந்த திட்டத்தை அமலாக்குவதற்கு, இந்த ஆண்டே அமலாக்குவதற்கு, உத்திரவாதம் அளிக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பி.சி. ரேஷியோவை பைனான்ஸ் வலியுறுத்துகிறார்களா இல்லையா என்ற விவரங்கள் இந்த அரசுக்கு வரவில்லை. தொகை போதாது என்ற காரணத்தால், திருத்திய மதிப்பீடுக்கு வந்திருக்கிறதே தவிர வேறு அல்ல. அந்த திருத்திய மதிப்பீட்டைப் பெற்று, அதற்குரிய ஆய்வுகளை நடத்தி கோப்பு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வந்தபிறகுதான், அரசு நடவடிக்கை எடுக்கும். இந்த நேரத்தில் இந்த கேள்விக்கு பதில் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்துறை மூலம் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை துவக்கும் திட்டம்.

38—(*வினா எண். 10157)— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்ா—

(அ) தொழில் துறை மூலம் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?